மீட்டர் பேசுது

சென்னை	34.5°C	கோவை	35.2°C
வேலூர்	32.9°C	சேலம்	34.2°C
திருச்சி	34.1°C	நெல்லை	28.6°C
மதுரை	32.8°C	உதகை	20.2°C
கொடைக்கானல்	18.3°C		

பொன்மொழி: நாளைக்குச் செய்யலாம் என்று ஒரு வேலையைத் தள்ளிப்போடுவதில் தவறில்லை; அது நாளை மறுநாள் செய்யவேண்டிய வேலையாக இருக்குமானால். – ஆஸ்கார் வைல்ட்

சிஜஜ-யின் இந்தியப் பெண்கள் கூட்டமைப்பு சார்பில் சேலத்தில் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

சிஜஜ பெண்கள் அமைப்பு சார்பில்

மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு

காவேரி மருத்துவமனை மருத்துவர்கள் பங்கேற்பு

சேலம்

உலகளாவிய மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமான 'பிங்க்டோபர் 2026' நிகழ்வையொட்டி, இந்தியத் தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பான சிஜஜ -யின் இந்தியப் பெண்கள் கூட்டமைப்பு சார்பில் சேலத்தில் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சியில், சேலம் காவேரி மருத்துவமனையின் மகப்பேறு மற்றும் மகளிர் நலச்சிறப்பு மருத்துவர் டாக்டர் பி. சத்யா சுதாகர், புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். ராஜ்குமார் மற்றும் புற்றுநோய் மருத்துவ நிபுணர் டாக்டர் ஏ. நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு, மார்பக ஆரோக்கியத்தின் முக்கியத்துவம், நோய் அபாயக் காரணிகள், ஆரம்பக் கட்டத்திலேயே நோயைக் கண்டறிதல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு முயற்சிகளில் சேலம் காவேரி மருத்துவமனை தொடர்ந்து பங்கெடுத்துவருகிறது. இதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறை குறித்த சரியான தகவல்கள் மக்களுக்குச் சென்றடையும் என்றும், மார்பக ஆரோக்கியம் குறித்து தயக்கமின்றிப் பேச மக்கள் முன்வருவார்கள் என்றும் காவேரி மருத்துவமனை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேலம் விநாயகா மிஷன் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரி சார்பில் நடந்த உலக அலைடு ஹெல்த் தொழிற்முறை தின விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் மற்றும் நிர்வாகிகள்.

அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரி சார்பில்

உலக அலைடு ஹெல்த் தொழிற்முறை தின விழிப்புணர்வு

சேலம்

உலக அலைடு ஹெல்த் தொழிற்முறை தினம் ஆண்டுதோறும் பொது மக்களுக்கு சுகாதார துறையில் உள்ள அனைத்து பிரிவுகளின் முக்கியத்துவத்தை உணர்த்தவும், அதில் பணிபுரியும் அலைடு ஹெல்த் சயின்ஸ் தொழிற்நுட்பவியலாளர்களின் பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனை முன்னிட்டு சேலம் விநாயகா மிஷன் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரி சார்பில் உலக அலைடு ஹெல்த் தொழிற்முறை தின விழிப்புணர்வு நாடக நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியை பல்கலைக் கழகத்தின் வேந்தர் டாக்டர் கணேசன் வழிகாட்டுதலின்படி, சேலம் காந்தி மைதானத்தில் நடத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு கல்லூரியின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிகுமார் பங்கேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவல்லி கலந்து கொண்டார்.

தொடர்ந்து மாணவ, மாணவிகள் சுகாதாரத் துறையின் அலைடு ஹெல்த் சயின்ஸ் சார்ந்த பிரிவுகளை பறைசாற்றும் வகையிலும் அதன் பங்கு மற்றும் நோயாளிகளுக்கான பல்வேறு சேவைகள் சார்ந்தும் மவுன மொழி நாடகத்தை அரங்கேற்றினர். இதற்கான ஏற்பாட்டினை கல்லூரியின் பேராசிரியை தமிழ் சுடர் மற்றும் உதவி பேராசிரியர்கள் விக்னேஸ்வரா, குபேரன் மற்றும் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

நாமக்கல்லில் அடுத்தடுத்து 4 கடைகளின் பூட்டை உடைத்து திருட்டு

நாமக்கல்

நாமக்கல்லில் சேலம் சாலையில் ஏராளமான வணிக நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், நேற்று காலை வழக்கம்போல் கடைகளைத் திறக்க வந்த உரிமையாளர்கள், கடைகளின் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இதில், ஒரு செல்போன் கடையில் தலா ரூ.3,000 மதிப்பிலான 10 செல்போன்கள் திருடப்பட்டிருந்தன. அருகிலிருந்த மற்றொரு செல்போன் கடையில் ரூ.10,500 ரொக்கமும், ஜவுளிக் கடையில் ரூ.15,000 ரொக்கத்துடன் ஜவுளி ரகங்களும் திருடப் பட்டிருந்தன. மேலும், அருகிலிருந்த லாரி போக்குவரத்து நிறுவனத்திலும் திருட முயற்சி நடைபெற்றுள்ளது.

இதுகுறித்த தகவலின் பேரில், சம்பவ இடத்துக்குச் சென்ற நாமக்கல் போலீஸார் விசாரணை நடத்தினர். மேலும், கைரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு, அங்கிருந்த தடயங்கள் பதிவு செய்யப்பட்டன.

இதுதொடர்பாக நாமக்கல் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, மர்ம நபர்களைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

கடைவீதியில் 10 மணி வரை காய்கறி கடைகள் வைப்பதால் ஜவுளி வியாபாரிகள் பாதிப்பு

நடவடிக்கை எடுக்க மாநகராட்சி ஆணையரிடம் மனு

சேலம்

சேலம் டவுனில் காலை நேரங்களில் காலை 10 மணி வரை தினசரி காய்கறி கடை நடத்துபவர்களால் ஜவுளி வியாபாரம் பாதிப்பதாக சேலம் மாநகராட்சி ஆணையரிடம் ஜவுளி வியாபாரிகள் மனு அளித்துள்ளனர்.

இதுதொடர்பாக, சேலம் ஜவுளி மொத்த வியாபாரிகள் சங்கத்தினர் மாநகராட்சி ஆணையர் லலித் ஆதித்ய நீலத்திடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

சேலம் டவுன் கடைவீதி மற்றும் முதல் அக்ரஹாரம் சாலைகளில் அதிகாலையில் காய்கறி கடைகள் அமைத்து வியாபாரம் செய்து வருகின்றனர்.

இவர்கள் காலை 8 மணி வரை கடை நடத்திக் கொள்ள வேண்டும். ஆனால், பகல் 10 மணி வரை கடையை நடத்துவதால், எங்களுக்கு வியாபாரம் பாதிக்கிறது. இதனால் காய்கறி வியாபாரிகளுக்கு மாற்று இடம் ஒதுக்கி தர வேண்டும், என்று தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஜவுளி வியாபாரிகள் சிலர் கூறியதாவது:

சேலம் டவுன் கடைவீதி மற்றும் முதல் அக்ரஹாரம் சாலைகளில் காலை 8 மணிக்கு காய்கறி கடைகளை அகற்றிக் கொள்ள வேண்டும். ஆனால் 10 மணி வரை வியாபாரம் செய்து விட்டு சுத்தம் செய்யாமல் சென்று விடுகின்றனர். தீபாவளி நெருங்கி வரும் நிலையில் சாலையோரங்களில் கடைகளை ஆக்கிரமித்து நீண்ட நேரம் காய்கறி கடை வைத்திருப்பதால் எங்களது வியாபாரம் பாதிக்கிறது. எனவே, சாலையோர ஆக்கிரமிப்பு கடைகளை அகற்ற வேண்டும்.

இது தவிர வடமாநில வியாபாரிகள் என கூறிக்கொண்டு பலரும் தெருக்களில் வியாபாரம் செய்கின்றனர். இவர்களை கண்காணிக்க வேண்டும். நாங்கள் குப்பை வரி, சொத்து வரி, குடிநீர் வரி என பல்வேறு வரிகளை கட்டுகிறோம். ஆனால், சிலர் ஓட்டல்கள் மற்றும் திருமண மண்டபங்களில் தற்காலிகமாக துணிகள் விற்பனை செய்கிறார்கள். இதனால், எங்களுக்கு வியாபாரம் பாதிக்கிறது.

இதுதொடர்பாக மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மேட்டூர் அனல் மின்நிலைய நுழைவாயில் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவினர்.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு ஆர்ப்பாட்டம்

மேட்டூர்

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, மேட்டூர் அனல் மின்நிலைய நுழைவாயில் முன்பு மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஐஎன்டியுசி கிளைத் தலைவர் செல்வராஜ் தலைமை வகித்தார். இதில், ஸ்மார்ட் மீட்டர் திட்டத்துக்கான ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பைத் திரும்பப் பெற வேண்டும். மின் உற்பத்தி மற்றும் மின் கடத்தலைத் தனியாருக்கு வழங்கும் பிபிபி திட்டத்தைக் கைவிட வேண்டும். ஐந்தாண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தும் எஃப்டிஇ முறையைத் திரும்பப் பெற வேண்டும்.

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பணிக்கொடையை ரூ.20 லட்சத்திலிருந்து ரூ.25 லட்சமாக உயர்த்தியதை மின்வாரியப் பணியாளர்களுக்கும் உடனடியாக அறிவிக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கான குடும்ப நல நிதியை ரூ.3 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தியதை, மின்வாரியப் பணியாளர்களுக்கும் 2021-ம் ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதியை முன் தேதியாகக் கொண்டு அமல்படுத்த வேண்டும். வாரிய ஆணை எண் 2-ஐ ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் சிஜடியு, ஐஎன்டியுசி, அதிமுக உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் என 40-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

போலி சான்றிதழ் வழங்கியதாக ஓய்வுபெற்ற நகராட்சி ஊழியர் உட்பட 3 பேர் கைது

நாமக்கல்

ராசிபுரத்தைச் சேர்ந்தவர் குணசேகரன் (50). இவர் தனது கட்டிடத்துக்கு மின் இணைப்பு கோரி மின்வாரியத்தில் விண்ணப்பித்துள்ளார். அந்த விண்ணப்பத்துடன், ராசிபுரம் நகராட்சி சார்பில் வழங்கப்பட்ட தடையில்லா சான்றிதழையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இந்நிலையில், குணசேகரன் சமர்ப்பித்த தடையில்லா சான்றிதழ் போலியானது என்பது தெரியவந்தது. இதுதொடர்பாக மின்வாரியம் அளித்த தகவலின் பேரில், ராசிபுரம் நகராட்சி ஆணையர் கோபிநாத் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அந்தப் புகாரின் பேரில், ராசிபுரம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில், சேந்தமங்கலத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ராசிபுரம் நகராட்சி ஊழியர் குமாரசாமி (62), போலியாக தடையில்லா சான்றிதழ் வழங்கியது தெரியவந்தது.

இதையடுத்து, குமாரசாமியைக் கைது செய்த போலீஸார், அவர் அளித்த தகவலின் பேரில் கட்டிட உரிமையாளர் குணசேகரன் மற்றும் ரவிக்குமார் என்பவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கூட்டுறவே! நாட்டுயர்வு!!

S.S.70.SALEM DISTRICT COMMERCIAL TAXES
DEPARTMENT EMPLOYEES CO-OPERATIVE
THRIFT & CREDIT SOCIETY LTD.,
G11, GROUND FLOOR COMMERCIAL TAXES BUILDINGS,
PITCHARDS ROAD, HASTHAMPATTY, SALEM 636 007.

பொதுப்பேரவைக் கூட்ட அறிவிப்பு

பேரன்புடையீர் வணக்கம், நாள் :15.10.2026

2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29 ஆம் தேதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி அளவில் நமது சங்கத்தின் பொதுப்பேரவைக்கூட்டம் கீழ்க்காணும் பொருள் குறித்து ஆலோசித்து முடிவு செய்ய "நமது சங்க அலுவலக வளாகத்தில்" நடைபெற உள்ளது. பேரவைக்கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆலோசிக்கப்படும் பொருள்

1) நமது சங்கத்தின் 2025-2026-ம் ஆண்டிற்கான இறுதி தணிக்கை அறிக்கையை வாசித்து பதிவு செய்தல்.

2) நமது சங்கத்தின் 2025-2026-ம் ஆண்டின் தணிக்கை அறிக்கைப்படி ஈட்டியுள்ள நிகர இலாபம் ரூ.13,36,179.00ஐ சங்க துணை விதிகளின்படியும், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988-ன் படி இலாபப் பிரிவினை செய்தல்.

3) சங்கத்தின் 2026-2027 மற்றும் 2027-2028-ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவுத்திட்டம் அங்கீகாரம் செய்தல்.

4) சங்க இணை உறுப்பினர்களை சங்கத்தின் 'அ' வகுப்பு உறுப்பினர்களாக அங்கீகரித்தல் தொடர்பாக. (சங்க அறிவிப்பு பலகையில் உள்ளவாறு)

5) நாளது தேதி வரை சங்க உறுப்பினர்பொறுப்பிலிருந்து விலகியவர்களை சங்க உறுப்பினர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளதை பேரவையில் ஒப்புதல் செய்வது தொடர்பாக (சங்க அறிவிப்பு பலகையில் உள்ளவாறு)

6) கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க எண் 27051/2024 வ.ஆ.நாள் 29-11-2024ன் படி சங்க துணை விதி எண் 4, 7, 13 மற்றும் 40.1ஐ திருத்தம் மேற்கொள்ளுதல் தொடர்பாக.

7) நமது சங்கத்தில் பிணைதாரர் நிவாரண நிதி சங்க துணை விதி எண் 43.3-ல் புதியதாக ஏற்படுத்துதல் தொடர்பாக,

8) கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க எண் 12984/2025 பி1-1(1) நாள் 06-05-2025 ன் படி Risk Alleviation Fund (இடர் களையும் நிதி) துணை விதி எண் 51(b)-ல் துணை விதி ஏற்படுத்துதல் தொடர்பாக

9) செயலாட்சியர் அவர்களால் கொண்டுவரப்படும் இதர தீர்மானங்கள்.

உறுப்பினர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகளுடன்

கு.செந்தில்குமார்
செயலாளர் பொறுப்பு

இரா.சுகன்யா
கூட்டுறவு சார் பதிவாளர்
/செயலாட்சியர்

வரி விளம்பரங்கள்

பொது

விற்பனை

BMG BEST MONEY GOLD
மார்க்கெட் விலைக்கு தங்கம், வெள்ளி விற்க
தென்னிந்தியா முழுவதும் கிளைகள்
97502 97502

ஈரோட்டில் கிரெடாய் அமைப்பு சார்பில் வீடு, வீட்டுமனை, அடுக்குமாடிக் குடியிருப்புகளின் விற்பனைக் கண்காட்சி நடைபெறுவதை முன்னிட்டு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாநில இணைச் செயலாளர் வி.சதாசிவம் பேசினார்.

கிரெடாய் அமைப்பு சார்பில்

வீடு, வீட்டுமனை விற்பனை கண்காட்சி ஈரோட்டில் நாளை தொடக்கம்

ஈரோடு

ஈரோடு கிரெடாய் அமைப்பு சார்பில், வீடு, வீட்டுமனை மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் விற்பனைக் கண்காட்சி நாளை (17-ம் தேதி), 18-ம் தேதிகளில் ஈரோட்டில் பெருந்துறை சாலையில் உள்ள பரிமளம் மகாலில் நடைபெற உள்ளது.

இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டாளர்கள் சங்கக் கூட்டமைப்பான கிரெடாய் அமைப்பு சார்பில், 'உங்கள் கனவு இல்லம் – பேர்ப்ரோ 2026' என்ற தலைப்பில் இந்தக் கண்காட்சி நடத்தப்படுகிறது. இதற்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம், ஈரோட்டில் உள்ள கிரெடாய் அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாநில இணைச் செயலாளர் வி.சதாசிவம் தலைமை வகித்துப் பேசியதாவது:

ஈரோடு கிரெடாய் அமைப்பு சார்பில் 3-வது முறையாக இந்தக் கண்காட்சி நடத்தப்படுகிறது. இதில் 40-க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட உள்ளன. ஈரோடு, கோவை மாவட்டங்களைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் பங்கேற்கின்றன.

கண்காட்சியின் தொடக்க விழா வரும் 17-ம் தேதி (நாளை) காலை 10 மணிக்கு பரிமளம் மகாலில் நடைபெற உள்ளது. அமைச்சர்கள் அருண்ராஜ், செங்கோட்டையன், ராஜ்குமார், விஜய் பாலாஜி, லோகேஷ் தமிழ்ச்செல்வன், எம்.எல்.ஏ.க்கள் ஆனந்தமோகன், சண்முகன் ஆகியோர் பங்கேற்று கண்காட்சியைத் தொடங்கி வைக்கின்றனர். ஆட்சியர் கந்தசாமி, மாநகராட்சி ஆணையர் அர்பித் ஜெயின், எஸ்பி கிரண்ஸ்ருதி, ஸ்டேட் வங்கியின் சென்னை பொதுமேலாளர் ஹரிதா பூர்ணிமா, தமிழ்நாடு கிரெடாய் தலைவர் டபுள்யூ. எஸ். ஹபீப் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்கின்றனர்.

இந்தக் கண்காட்சியில் வீடு, வீட்டுமனைகளை முன்பதிவு செய்பவர்களுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட உள்ளன. மேலும், வங்கிக் கடன் பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இரு நாட்களும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை கண்காட்சி நடைபெறும். அனுமதி இலவசம், என்றார்.

கூட்டத்தில் ஈரோடு கிரெடாய் தலைவர் வி.எஸ்.குமரேசன், செயலாளர் ஈ.எஸ்.எம்.ராஜன், பொருளாளர் கே.ஈஸ்வரமூர்த்தி, கண்காட்சி ஒருங்கிணைப்பாளர்கள் டி.ஜெயபிரசாத், ஏ.அருணாச்சலம், எம்.டி.ஈஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.320 சேலம் மெயின் ரோடு, அனங்கூர் கார்னர், கிரீன் ட்ரெண்ட்ஸ், கொமாரபாளையம், தமிழ்நாடு - 638183

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, **"உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு"** எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1181210170000018 / 1. Mr. முருகேசன் 2. Mrs. சுமதி 3. Mr. அடக்கியான்	(I) 15.07.2021 & 14.07.2021 அன்றுள்ளபடி ₹ 16,89,149/- (ரூபாய் பதினாறு லட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து நூற்று நாற்பத்து ஒன்பது மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 17.12.2022 & நேரடி சுவாதீனம் - 19.06.2026	13.10.2026 அன்றுள்ளபடி ₹ 32,21,146.49 (ரூபாய் முப்பத்து இரண்டு லட்சத்து இருபத்து ஒன்றாயிரத்து நூற்று நாற்பத்தாறு மற்றும் பைசா நாற்பத்தொன்பது மட்டும்)	₹ 18,22,000/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து இருபத்து இரண்டாயிரம் மட்டும்)	₹ 1,82,200/- (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து இருநூறு மட்டும்)

சொத்து விவரம்: சேலம் பதிவு மாவட்டம் மற்றும் எடப்பாடி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட **சங்கரி தாலுகா, சேலம் மாவட்டம், கிராம எண்.3, அரசிராமணி பிட்-1,** சர்வே எண்.352/1, புஞ்சை ஹெக்டேர் 0.72.5, புஞ்சை ஏக்கர் 1.80 செண்ட், கிஸ்ட் Rs.2.25 (பட்டா எண்.1666) புஞ்சை ஏக்கர் 1.21 செண்ட் இதில் **பரப்பு புஞ்சை ஏக்கர் 0.06 செண்ட் அல்லது 2613 சதுர அடி சொத்து,** அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: சிந்தாமணி நிலங்கள், கிழக்கு-தெற்கு: விற்பனையாளர் நிலங்கள், மேற்கு: தார் ரோடு. கிழக்கு பக்கம் 1வது தாக்கு: கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 56 அடி, கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 56 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 39 அடி, தெற்கு வடக்காக மேற்கு பக்கம் 39 அடி. மொத்தம் 2184 சதுர அடி. மேற்கு பக்கம் 2வது தாக்கு: கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 22 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 39 அடி, மேற்கு குறுக்கு பக்கம் 44 அடி. **மொத்தம் 429 சதுர அடி. 1வது தாக்கு - 2184 சதுர அடி, 2வது தாக்கு - 429 சதுர அடி, ஆக மொத்தம் 2613 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்,** அனைத்து இதர அனுபந்த உரிமைகள்.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 05.11.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 04.11.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	03.11.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.சதீஷ் - 95666 66963 / Mr.டிஜோ சாஜன் – 78451 92961.

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.**பிரபாகரன் **Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-
தேதி: 16.10.2026 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
பதிவு அலுவலகம் : கிரேப் கார்டன், எண்.27, 3வது "A" குறுக்கு,18வது பிரதானம், 6வது பிளாக், கொரமங்களம், பெங்களூரு-560095.

SARFAESI சட்டம், 2002-ன் பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள், இணை-கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களாகிய நீங்கள், உங்கள் அசையாச் சொத்துக்களை அடமானம் வைத்து உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் இடமிருந்து கடன்களைப் பெற்றுள்ளீர்கள். உங்கள் அனைவராலும் கடனைத் திருப்பித் செலுத்த வில்லை அதன் விளைவாக உங்கள் கடன் கணக்கு "செயல்படாத சொத்து" என வகைப்படுத்தப்பட்டுள்ளது, இந்நிலையில் மேற்படி சட்டத்தின் கீழ் ஒரு "பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவர்" என்ற முறையில் உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2)-ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும், "பாதுகாப்பு நலன் (அமலாக்க) விதிகள் 2002"-ன் விதி 2-ஐயும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்தி ஒரு கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டது, அவ்வறிவிப்பின் வாயிலாக, பத்தி எண்.2-ல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/ இணை-கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் ஆகியோர் அவ்வறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகையையும் அதற்கான எதிர்கால வட்டியையும், அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரப்பட்டனர், ஆயினும் பல்வேறு காரணங்களினால், அவர்களில் சிலருக்கு மேற்படி அறிவிப்புகளை சென்றடையச் செய்ய இயலவில்லை.

வ. எண்.	கடன்தாரர்/இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/அடமானதாரர் பெயர் மற்றும் முகவரி	கடன் கணக்கு எண்./ கடன் தொகை/ கிளை	நடைமுறைப்படுத்தப்படவுள்ள அடமான விவரங்கள்	NPA நாள் & கோரிக்கை அறிவிப்பு நாள்	நிலுவைத் தொகை ரூ/நாள்
1	1) **திரு. சுப்பிரமணி C** த/பெ. செல்லப்பன், 2) **திருமதி. சிவகாமி** க/பெ. சுப்பிரமணி, க.எண். 79/2, இட்டாம்-பாளையம், குடியாலத்தூர், பசுவனாபுரம், ஈரோடு, தமிழ்நாடு-638503	11982502 60000004 /ரூ.6,00,000/- /1198-சத்திய மங்கலம்	சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், சத்தியமங்கலம் SRO, கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், சத்தியமங்கலம் தாலுகா, குடியாலத்தூர் கிராமம், நத்தம் எஸ்.எப்.எண். 332/2, மனை எண்.5, அளவுகள் 1089 சதுர அடி, எல்லைகள்: வடக்கில்: காலி நிலம்; தெற்கில்: மனை எண் 6, வெள்ளையம்மாள் வீடு; கிழக்கில்: மனை எண் 4, அரப்புலியம்மாள் வீடு; மேற்கில்: தெற்கு-வடக்கு சாலை. வடக்கு- கிழக்கு-மேற்கு :10 மீட்டர், தெற்கு-கிழக்கு மேற்கு: 10 மீட்டர், கிழக்கு - தெற்கு வடக்கு: 10 மீட்டர், மேற்கு - தெற்கு வடக்கு : 10 மீட்டர் என மொத்தம் 1089 சதுர அடி /100 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது. பாதுகாப்பு ஒப்பந்த விவரம்: திருமதி சிவகாமி அவர்களால் 30.05.2024 அன்று வங்கிக்குச் சாதகமாகச் செய்து கொடுக்கப்பட்ட, சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 3506/2024 என்ற ஆவண எண்ணுடன் பதிவு செய்யப்பட்ட MODTD.	08.08.2026 & 20.08.2026	ரூ. 3,88,420/- 17.08.2026 தேதியில்

எனவே, பத்தி எண்.2-ல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர் மற்றும் அடமானதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது, பத்தி எண்.6-ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதியின்படி, அந்தந்தக் கடன் கணக்கு தொடர்பாகச் செலுத்த வேண்டிய கண்டறியப்பட்ட மொத்த தொகையை இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்கூறிய மொத்த தொகையானது அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் பணம் செலுத்தும் தேதி வரை செலுத்தப்படக்கூடிய பிற தொகைகள் உட்பட செலுத்ததவறினால் பத்தி எண்.4-ல் விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மீதான பிணைய உரிமையை அமல்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் நிர்ப்பந்திக்கப்படும் என்பது இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது.

சட்டத்தின் கீழ் மேற்கூறிய நிதிசார்ந்த விவகாரங்கள் தொடர்பாகக் கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர்களுக்கு எதிராக உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்-க்குக் கிடைக்கக் கூடிய உரிமைகள் மற்றும் நிவாரணங்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும், பிணையத் சொத்தை மீட்டுக்கொள்வதற்கு உங்களுக்குக் கிடைக்கும் கால அவகாசம் தொடர்பாக, அச்சட்டத்தின் பிரிவு 13(8)-ன் பால் உங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது, மேலும் அச்சட்டத்தின் பிரிவு 13(13)-ன்படி பிணையக் கடன்அளித்தவரின் முன் அனுமதியின்றி, மேற்கூறிய பிணையச் சொத்தை விற்பனை, குத்தகை அல்லது வேறு ஏதேனும் வழியில் மாற்றுவதோ, அகற்றுவதோ அல்லது அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்வது உங்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். அத்தகைய செயல் ஏதேனும் நிகழுமாயின், அது சட்டத்தின் பிரிவு 29-ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகவே கருதப்படும்.

நாள் : 14.10.2026, இடம் : ஈரோடு
Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun on behalf of KSL MEDIA LIMITED and Printed by M Jegadesh Kumar at THG PUBLISHING PVT.LTD. 391/1 & 391/2 Kamaraj Road, Uppilipalayam, Coimbatore, Tamil Nadu 641015. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).